செ.வெ.எண்: 19/மே நாள்: 08.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.ஜித்தேந்திரசிங் , திரு.பிரதாப்நாராயண் சர்மா அவர்கள், ஆகியோர் முன்னிலையில்

## இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்குச்சாவடிக்குரிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தல் (Computerized Randomization) இன்று நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 1307 வாக்குச்சாவடிகளுக்குரிய வாக்குப்பதிவு இயந்திரத்தினை கணிணி மூலம் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கும் பணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (08.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் திரு.ஜித்தேந்திரசிங் , திரு.பிரதாப்நாராயண் சர்மா அவர்கள், ஆகியோர் முன்னிலையில் கணினி மூலம் குலுக்கல் முறையில் (Computerized Randomization) வாக்குச்சாவடி மையங்கள் தேர்வு செய்யப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 பணிகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் மிக துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளான 209-பரமக்குடி, 210-திருவாடானை, 211-இராமநாதபுரம், 212 முதுகுளத்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1307 வாக்குச்சாவடிகளுக்கு Ballet Unit, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 346-ம், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு 738-ம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு 738-ம், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு 419-ம் என ஆக மொத்தம் 2241 (Ballet Unit) கையிருப்பில் உள்ளன. இதுதவிர, கட்டுப்பாட்டுக் கருவி (Control Unit) , பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 346-ம், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு 369-ம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு 369-ம், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு 419-ம் என ஆக மொத்தம் 1503 கட்டுப்பாட்டுக் கருவி (Control Unit) இருப்பில் உள்ளது.

அதனைத்தொடர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் தபால் வாக்கு விண்ணப்ப படிவம் 12 தொடர்பாக நான்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (பரமக்குடி) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன், (முதுகுளத்தூர்) திரு.ராமையா, (தேர்தல்) திருமதி.சாந்தா, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**